பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை - 4

*18 09 2025 THURSDAY* *6.30 PM*

## மாநிலச் செய்திகள்
## தலைப்புச் செய்திகள்

- வாக்காளர் பட்டியல் குறித்து காங்கிரஸ் முன்னாள் தலைவர் திரு ராகுல்காந்தி தெரிவித்த குற்றச்சாட்டுகள் அடிப்படை ஆதாரமற்றவை என்று தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.

- அரசியல் சாசன அமைப்புகளின் மாண்புகளை குலைக்கும் வகையில் காங்கிரஸ் செயல்படுவதாக பிஜேபி குற்றம் சாட்டியுள்ளது.

- அரசியல் கட்சிகளின் கூட்டங்கள் மற்றும் பேரணிக்கான பொதுவான விதிமுறைகளை வகுக்குமாறு சென்னை உயர்நீதிமன்றம், காவல்துறைக்கு உத்தரவிட்டுள்ளது.

- கிருஷ்ணகிரி, தர்மபுரி, சேலம் உள்ளிட்ட 21 மாவட்டங்களுக்கு உட்பட்ட ஒரு சில பகுதிகளில் இன்று கனமழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

- உலக Speed ஸ்கேட்டிங் சாம்பியன் போட்டியில் இந்தியாவின் Anish Raj வெண்கலப்பதக்கம் வென்றார்.

-- இனி விரிவான செய்திகள் –

<<<<<<>>>>>>

வாக்காளர் பட்டியலில் இருந்து பெயர்கள் நீக்கப்பட்டது தொடர்பாக காங்கிரஸ் முன்னாள் தலைவர் திரு ராகுல்காந்தி தெரிவித்த குற்றச்சாட்டுகள் அடிப்படை ஆதாரமற்றவை என்று தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.

இதுதொடர்பாக தேர்தல் ஆணையம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், வாக்காளர் பட்டியலில் இருந்து பெயரை நீக்குவதற்கான நடவடிக்கைகளை ஆன்லைன் வாயிலாக எந்தவொரு தனிநபரும் மேற்கொள்ள இயலாது என்று திட்டவட்டமாக கூறியுள்ளது.

கடந்த 2023-ஆம் ஆண்டு கர்நாடக மாநிலம் Aland சட்டப்பேரவைத் தொகுதிக்கு உட்பட்ட வாக்காளர்களை நீக்குவதற்கு சிலர் மேற்கொண்ட முயற்சிகள் தோல்வியடைந்ததாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதுதொடர்பான, தேர்தல் ஆணையத்தின் புகாரின் பெயரில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் அந்த செய்திக்குறிப்பில் தேர்தல் ஆணையம் தெளிவுபடுத்தியுள்ளது.

முன்னதாக, புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய திரு ராகுல்காந்தி, இந்த *Aland* சட்டப்பேரவைத் தொகுதியில் 6 ஆயிரத்திற்கும் மேற்பட்ட வாக்காளர்களின் பெயர் நீக்கப்பட்டதாக குற்றம் சாட்டினார்.

மென்பொருளை பயன்படுத்தி பெயர்கள் நீக்கப்பட்டதாக திரு ராகுல்காந்தி தெரிவித்தார்.

இதற்கிடையே, தேர்தல் ஆணையத்திற்கு எதிராக அடிப்படை ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளை காங்கிரஸ் தெரிவித்து வருவதாக பிஜேபி குற்றம் சாட்டியுள்ளது.

இன்று புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அக்கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவரான திரு அனுராக் தாக்கூர், அரசியல் சாசன அமைப்புகளின் மாண்புகளை குலைக்கும் வகையில் திரு ராகுல்காந்தி செயல்படுவதாக குறை கூறினார்.

திரு ராகுல்காந்தியின் செயல்பாடுகள் ஜனநாயகத்தை வலுவிழக்க செய்யும் வகையில் உள்ளதாகவும் திரு அனுராக் தாக்கூர் தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

அன்னையின் பெயரில் மரம் நடும் இயக்கத்தின்கீழ், வரும் 25-ஆம் தேதி, 7 கோடியே 50 லட்சம் மரக்கன்றுகளை நட இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக மத்திய சுற்றுச்சூழல் துறை அமைச்சர் திரு புபேந்தர் யாதவ் கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் இந்த இயக்கத்தின்கீழ், பல்வேறு நாடுகளை சேர்ந்த தூதர்கள் மரக்கன்றுகள் நடும் விழாவில் பங்கேற்று அவர் பேசினார்.

இந்த இயக்கத்தில் நாட்டு மக்கள் அனைவரும் பங்கேற்று மரக்கன்றுகளை நட வேண்டும் என்றும் அமைச்சர் கேட்டுக்கொண்டார்.

<<<<<<>>>>>>

அரசியல் ஆதாயத்திற்காக பல்வேறு விவகாரங்களில் திமுக இரட்டை நிலைப்பாட்டை கடைபிடிப்பதாக அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு எடப்பாடி பழனிசாமி குற்றம் சாட்டியுள்ளார்

சேலத்தில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், எதிர்க்கட்சியாக இருக்கும்போது ஒரு நிலைப்பாட்டையும், ஆளுங்கட்சியாக இருக்கும்போது ஒரு நிலைப்பாட்டையும் திமுக கடைபிடிப்பதாக கூறினார்.

நீட் தேர்வு ரத்து தொடர்பான வாக்குறுதியை நிறைவேற்ற திமுக அரசு தவறிவிட்டதாகவும் திரு எடப்பாடி பழனிசாமி குறை கூறினார்.

<<<<<<>>>>>>

*தமிழகத்திற்கு கூடுதலாக 350 மருத்துவப்படிப்புகளுக்கான இடங்களை தேசிய மருத்துவ ஆணையம் ஒதுக்கீடு செய்ததற்காக மத்திய அரசுக்கு நன்றி தெரிவித்துக்கொள்வதாக பிஜேபி மாநிலத்தலைவர் திரு நயினார் நாகேந்திரன் கூறியுள்ளார்.*

*இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், மாணவர்களின் மருத்துவக்கனவை நனவாக்கும் வகையில், மத்திய அரசு இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.*

*இந்த அறிவிப்பு அனைத்துத்தரப்பு மக்களிடையே வரவேற்பை பெற்றுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.*

*கூடுதலாக மருத்துவ இடங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்ட கல்லூரிகளில் அரசு மருத்துவக்கல்லூரி ஒன்று கூட இடம்பெறாதது, திமுக அரசின் நிர்வாகத் திறமையின்மையை எடுத்துக்காட்டுவதாக உள்ளது என்றும் திரு நயினார் நாகேந்திரன் கூறியுள்ளார்.*

*<<<<<<>>>>>>*

*அரசியல் கட்சிகளின் கூட்டங்கள் மற்றும் பேரணிக்கு அனுமதி அளிப்பதற்கான பொதுவான விதிமுறைகளை வகுக்குமாறு சென்னை உயர்நீதிமன்றம், காவல்துறைக்கு உத்தரவிட்டுள்ளது.*

*இப்பிரச்சினை தொடர்பாக தமிழக வெற்றிக்கழகம் சார்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுவினை விசாரணை செய்த நீதிபதி திரு என். சத்தீஷ்குமார் இன்று இதற்கான உத்தரவினை பிறப்பித்தார்.*

*இவ்வழக்கின் விசாரணை வரும் 24-ஆம் தேதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.*

*<<<<<<>>>>>>*

*தேசிய விருதுபெற்ற Chalo Jeete Hain குறும்படம் நாடுமுழுவதும் லட்சக்கணக்கான பள்ளிகள் மற்றும் 500 திரையரங்குகளில் இன்று திரையிடப்பட்டது.*

*பிரதமர் திரு நரேந்திர மோடியின் மாணவர் பருவ வாழ்க்கையை அடிப்படையாக கொண்டு இந்த குறும்படம் உருவாக்கப்பட்டுள்ளது.*

*இந்த குறும்படத்திற்கு 2019-ஆம் ஆண்டு தேசிய விருது வழங்கப்பட்டது.*

*கோவையில் இந்த குறும்படத்தை பார்த்தவர்கள் அனைவருக்கும் கல்வியை இது வலியுறுத்துவதாக தெரிவித்தனர்.*

*(Sound Byte – பார்வையாளர்கள் - 66 Sec. )*

*<<<<<<>>>>>>*

கிருஷ்ணகிரி, தர்மபுரி, சேலம் உள்ளிட்ட 21 மாவட்டங்களின் ஒரு சில பகுதிகளில் இன்று கனமழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குனர் திரு செந்தாமரை கண்ணன் கூறியுள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

*(Sound Byte – செந்தாமரை கண்ணன் - 46 Sec.)*

<<<<<<>>>>>>

*மாவட்டச் செய்திகள்*

தூத்துக்குடி மாவட்டத்தில் போதைப்பொருள் பயன்பாட்டிற்கு எதிரான விழிப்புணர்வு இயக்கத்தை மாநில அமைச்சர் திருமதி கீதா ஜீவன் இன்று தொடங்கிவைத்தார்.

--------------------

கன்னியாகுமரி மாவட்டம் கல்குளம் வட்டத்தில் நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமினை ஆட்சியர் திருமதி அழகுமீனா இன்று ஆய்வு செய்தார்.

-----------------

திருச்சி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களை ஆட்சியர் திரு சரவணன், அனைத்துக்கட்சி பிரதிநிதிகள் முன்னிலையில் இன்று ஆய்வு செய்தார்.

------------------

மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் நாளை நடைபெறுவதாக இருந்த ஓய்வூதியதாரர் குறைதீர் கூட்டம் வரும் 24-ஆம் தேதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது

--------------------

காஞ்சிபுரம் மாவட்டத்தில் விவசாயிகள் குறைதீர் கூட்டம் நாளை நடைபெறும் என்று ஆட்சியர் திருமதி கலைச்செல்வி மோகன் கூறியுள்ளார்.

----------------

ராணிப்பேட்டை மாவட்டம் பென்னகர் கிராமத்தில் தூய்மைப்பணிகள் குறித்த விழிப்புணர்வு நடை பயணம் நடைபெற்றது.

----------------

கள்ளக்குறிச்சி மாவட்டம் கூத்தக்குடி கிராமத்தில் மலைதேனிக்கள் கொட்டியதில் ஒருவர் உயிரிழந்தார்.

-------------

*வைகை அணையிலிருந்து பாசனத்திற்காக இன்று முதல் தண்ணீர் திறந்துவிடப்பட்டுள்ளது.*

*<<<<<<>>>>>>*

***<u>விளையாட்டுச் செய்திகள்</u>***

*உலக Speed ஸ்கேட்டிங் சாம்பியன் போட்டியில் இந்தியாவின் Anish Raj வெண்கலப்பதக்கம் வென்றார்.*

*சீனாவில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் ஆடவர் ஜுனியர் பிரிவில் அவர் இப்பதக்கத்தை கைப்பற்றினார்.*

*இப்போட்டியில் இந்தியா இதுவரை 2 தங்கம் 2 வெண்கலப்பதக்கங்களை வென்றுள்ளது.*

*-------------*

*சீன மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் சாத்விக் சாய்ராஜ் – ஷிராக் ஷெட்டி இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.*

*ஆடவர் இரட்டையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் இந்த இணை, 21-13, 21-12 என்ற செட் கணக்கில், சீன தைபே-யின் Wang Chi Lin – Chiu Hsiang Chieh இணையை வென்றது.*

*-----------------*

*இந்தோனேஷிய மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் பிரியா – ஸ்ருதி இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.*

*-----------------*

*கொரியாவில் நடைபெற்று வரும் ஆசிய சாஃப்ட் டென்னிஸ் சாம்பியன் போட்டியில் இந்தியா வெண்கலப் பதக்கம் வென்றது.*

*-----------------*

*மலேசியாவில் நடைபெற்றுவரும் 16 வயதுக்குட்பட்டோருக்கான ஆசிய மகளிர் கூடைப்பந்து போட்டியில் இந்தியா இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளது.*

*<<<<<<END>>>>>>*